1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) காரையாறிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தின் மாநில எல்லைவரை ரூ. 52.50 லட்சம் அளவில் ஒரு புதிய சாலே அமைக்கும் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொருளாதார பல மாநில முக்கிய சாலே திட்டத்தின்கீழ் எடுத்து கொள்ளவேண்டுமென மத்திய அரசிற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : நீண்ட நெடுங்காலமாக இந்தப் பாதையை அமைக்க வேண்டுமென்று கேட்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலேப் பகுதியில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற வாசஸ்தலங்கள் அமைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இதையும் பரிசீலனே செய்யுமா? மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தி அந்தப் பாதையை அமைப்பதற்கு நம் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பாதையைப் பற்றிய கேள்வி. முக்கிய சாலே திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ள வேண்டுமென மத்திய அரசுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் வேலே தொடங்கிவிடலாம்.

Loans to Taxi Drivers' Co-operdtive Societies

* 342 Q.—THIRU A. M. RAJA: Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of loan sanctioned to each of the Taxi Drivers' Co-operative Societies till 30th June 1973?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : இப்போது நபர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் அரசாங்க பங்கு மூலதனமாகக் கொடுத்து வருகிறது. ஒவ்வொரு சொஸைட்டிக்கும். அது மிகக் குறைவாக இருக்கிறது. அதனுல் டாக்சி ட்ரைவர்கள் ரூ 2,500 அவர்கள் பங்குக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலேயில் அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆகவே,

---

@140-142-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அரசாங்க பங்கு மூலதனத்தை தலைக்கு ரூபாய் இரண்டாயிரம் என்று உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா? அதோடு இப்போது பெட்ரோல் விலை கூடிவிட்டதால் அவர்களுக்கு அன்றாடத் தவணை அதிகமாகத் தெரிகிறது. இந்த ஐந்தாண்டுகளுக்குள் முழுத் தவணையையும் கட்டியாக வேண்டும். ஆகவே அதை ஏழு ஆண்டுகளாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த இரண்டு புதிய கோரிக்கைகளையும் பரிசீலிக்கலாம்.

திரு. த. சோலையா : கார் ஓட்டுபவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கார் வழங்குவதற்கு நகராட்சிகள், பெரிய கார்ப்பரேஷன்கள், முனிசிபாலிட்டிகள் இவைகளில்தான் வழங்குவதாகத் தெரிய வருகிறது. மேஜர் பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைத்துக் கார் வழங்க அனுமதி கோரினால் அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி பல கோரிக்கைகள் வந்திருக்கிற காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதில் எல்லா ஊர்களையும், எங்கெங்கு தொடங்க விரும்புகிறார்களோ அவற்றையெல்லாம் இணைக்கலாம் என்ற ஒரு பிரச்சினையும் இருக்கிறது.

Production of Castor oil

* 343 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the places in this State where castor oil is processed on a large scale?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆமணக்கெண்ணெய் சேலம், விருதுநகர், திருப்பத்தூர் (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know the prospect of export market and also whether there are State Farms?

THE HON. THIRU S. MADHAVAN : I have no details.